மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்

அ.வ.எண்.123/2022

வா.சா.1

பெயர் :–பார்வதியம்மாள் தேதி :18.09.2024

வயது : த/பெ :

கிராமம் : தொழில் :

மாவட்டம்:

1872 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின் படி 2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 18 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

எனது கணவர் 5ம்பிரதிவாதியான தங்கராஜ் உடன் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் இல்லை. என் கணவர் தங்கராஜ் நீதிமன்றத்திற்கு வந்துள்ளரா என்றால் இல்லை என்று சாட்சி பதில் அளித்தார். ஆனால் நீதிமன்றத்தில் வசால் அருகே நின்று கொண்டிருந்த தங்கராஜ் என்பவரை அழைத்து விசாரித்தபோது அவர் முதலில் தன் பெயர் சங்கரபாண்டி என்று கூறினார். பின்னர் நீதிமன்றத்தில் அழைத்து விசாரித்த பின்னர் அவர் தனது பெயர் சங்கரபாண்டி என்ற தங்கராஜ் என்று கூறினார். சாட்சியிடம் தங்கராஜ் என்பவரை யார் என்று கேட்டபோது என் கணவர் தான் ஆனால் எங்களுக்குள் பிரச்சனை என்பதால் தனித்தனியாக இருக்கிறோம் என்று கூறினார். தங்கராஜிடம் சாட்சி கூண்டில் இருக்கும் நபர் யார் என்று கேட்ட போது எனது மனைவி தான் ஆனால் எங்களுக்குள் பிரச்சனை இருப்பதால் தனித்தனியாக இருக்கிறோம் என்று கூறினார். நான் என் கணவரை இந்த வழக்கில் 5ம்பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னுடைய முகவரியும் 5ம்பிரதிவாதியின் முகவரியும் 5/16 கற்பகவிநாயகர் கோவில் தெரு, வல்லநாடு கஸ்பா என்ற ஒரே முகவரி தான் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கிற்கு வழக்கறிஞரிடம் விபரம் நான் தான் சொன்னேன். வழக்கு சொத்தின் சர்வே நம்பர் ஞாபகம் இல்லை. கிழமேல் தென்வடல் அளவு

ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சொத்தை யாரிடமிருந்து கிரையம் வாங்கினோம் என்றால் கந்தசாமி மாரியப்பனிடமிருந்து கிரையம் வாங்கினேன். எந்த வருடம் கிரையம் வாங்கினேன் என்றால் 2022ல் கிரையம் வாங்கினேன். தேதி தெரியாது. தாவா சொத்து கந்தசாமி மாரியப்பனுக்கு எந்த ஆவணங்கள் மூலம் பாத்தியம் என்றால் தெரியாது. நான் கிரையம் வாங்கும்போது கந்தசாமிக்கும் மாரியப்பனுக்கும் அவருக்கு பாத்தியம் என்று சொல்லக்கூடிய ஆவணங்களை என்னிடம் கொடுத்தார்கள். என் கைவசம் உள்ளது. பட்டா, கிரைய ஆவணம் கொடுத்தார்கள். அந்த பட்டா, கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வழக்கு சொத்துக்கு மேற்குபக்கம் யாருடைய இடம் என்றால் சாந்தி, ஈசாக், பிச்சம்மாள், மற்றொரு நபர் பெயர் ஞாபகம் இல்லை. கிழக்குபக்கம் யாருடைய வீடு என்றால் நான் கிரையம் வாங்கிய இடம் உள்ளது. நான் எந்த வருடம் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார்கள் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்கு வடக்குபக்கம் யாருடைய இடம் என்றால் தம்புராட்டி, சண்முகசுந்தரம், தனுஷ்கோடி தெற்குபக்கம் யாருடைய இடம் என்றால் ஞாபகம் இல்லை. கந்தசாமி, மாரியப்பனிடம் நான் கிரையம் வாங்கும்போது என் கணவர் உடன் இருந்தார். நான் கிரையம் வாங்கும்போது வழக்கு சொத்திற்கு கிழக்கு பக்கம் வீடும், அதற்கு வடக்குபக்கமுள்ள முற்றத்தையும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் 1வது அயிட்டம் வீடு. 2வது அயிட்டம் வழக்கு சொத்து என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் கிழக்குபக்கம் தம்பான் வீடு சுவர் பாதிக்கு மேற்கு என்று கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தம்பான் வீட்டை அவரது மகன்கள் முத்து, சொர்ணம் ஆகியோரிடமிருந்து எனது மகன் மாரிமுத்து 28.11.2001ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். தம்பான் பிள்ளைகளிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண்.751/32 என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வீட்டின் சர்வே எண்.751/31 என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1ல் வீட்டுக்கு வடக்குபக்கமுள்ள முற்றத்தை தான் 2வது அயிட்ட சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய

வீட்டுக்கு முன்புறமுள்ள முற்றமும் வடக்குபக்கம் உள்ள தம்பான் வீட்டின் முற்றமும் ஒரே முற்றம் தான் சரிதான். முற்றம் சம்பந்தமாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாங்கிய கிரைய பத்திரமான வா.சா.ஆ.1ல் 2ம் அயிட்டத்தில் பிரிவின்றி பாதியை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.1ல் உள்ள 2ம் அயிட்ட சொத்தை தான் வழக்கு சொத்தாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தபசிலாக காண்பிக்கும்பொழுது வா.சா.ஆ.1ல் 2ம் அயிட்ட சொத்து முழுவதையும் காண்பித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய வா.சா.ஆ.1ல் 2ம் அயிட்ட சொத்தில் பிரிவின்றி பாதி யாருக்கு பாத்தியம் என்றால் என் கணவருக்கு பாத்தியம். என் கணவருக்கு பிரிவின்றி பாதி எவ்வாறு பாத்தியம் என்று வழக்கில் சொல்லவில்லை என்றாலும் அதற்குரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வா.சா.ஆ.1ல் 1வது அயிட்ட சொத்துக்கு வடக்குபக்கம் உள்ள 2ம் அயிட்ட சொத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. தம்பான் வீட்டை என் பையன் கிரைய வாங்கிய வீட்டிற்கு கிழக்குபக்கம் தான் 1,2 பிரதிவாதிகள் வீடும், காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். தம்பானிடமிருந்து என் மகன் கிரையம் வாங்கிய வீட்டிற்கு கிழக்குபக்கம் 1,2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கி வடக்குபக்கம் வீடும், தெற்குபக்கம் காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். தம்பான் வீட்டுக்கு கிழக்குபக்கம் தான் பாதாள கரண்டி அம்மன் கோவில் உள்ளது என்றால் நான் கிரையம் வாங்கும்போது நான்கு செங்கல் வைத்து வழிபட்டார்கள். பிறகு தான் பீடம் வைத்துள்ளார்கள். பீடம் கட்டியது 1,2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். பாதாள கரண்டி அம்மன் பீடம், 1,2 பிரதிவாதிகள் வீட்டின் சர்வே எண் ஞாபகம் இல்லை. 1,2 பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய வீடு, பாதாள கரண்டி அம்மன் பீடம் உள்ள இடம் முன்பு தொம்மை பர்ணாந்துக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தொம்மை பர்ணாந்து இறந்தற்கு பிறகு அவரது வாரிசுகள் பாக்கியத்தாய், மரியம்மாள், அந்தோணியம்மாள், ஜேசுராஜா, சவரிபிச்சை, ஆரோக்கியஅம்மாள் ஆகியோர்கள்

என் கணவர் தங்கராஜ்க்கு 21.01.2009 ல் பவர் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த பவரை வைத்துக்கொண்டு என் கணவர் 3,4 பிரதிவாதிகளுக்கு என் கணவர் தங்கராஜ் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த சொத்தை தான் 3,4 பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்து வழக்கு சொத்திற்கு கிழக்குபக்கம் உள்ள சொத்துக்கள் பற்றிய விபரம் நான் கிரையம் வாங்கிய காலத்திலேயே என் கணவருக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1ன் மூலம் தபசில் சொத்தை கிரையம் வாங்கிய காலத்தில் தபசில் சொத்திற்கு நான்குபுற எல்கைகளில் உள்ள நத்தம் நிலவரித்திட்ட சர்வே எண்கள் என் கணவர் தங்கராஜ்க்கு தெரியும் என்றால் ஞாபகம் இல்லை. நான் வா.சா.ஆ.1ல் கிரையம் வாங்கும்போது தபசில் சொத்தின் சர்வே எண்.751 உட்பிரிவுகள் எதுவும் வா.சா.ஆ.1ல் சொல்லவில்லை என்றால் தெரியாது. வா.சா.ஆ.1ல் 1வது அயிட்ட சொத்து சர்வே எண்.751/31 அதற்கு வடக்குபக்கம் உள்ள 2வது அயிட்ட சொத்து சர்வே எண்.751/37 என்றால் ஞாபகம் இல்லை. கந்தசாமி, மாரியப்பனிடம் கிரையம் வாங்கிய வீட்டிற்கு வடக்குபக்கம் முற்றம் உள்ளது என்றால் சரிதான். அந்த முற்றத்திற்கு வடக்குபக்கம் நான் குடியிருக்கும் 5/16 வீடு உள்ளது என்றால் சரிதான். அந்த 5/16 வீட்டிற்கு வடக்குபக்கம் தான் கற்பகவிநாயகர் கோவில் தெரு உள்ளது என்றால் சரிதான். கதவு எண்.5/16 வீடு அதற்கு தெற்குபக்கம் உள்ள முற்றம் அதற்கு தெற்குபக்கம் உள்ள கந்தசாமி, மாரியப்பனிடம் கிரையம் வாங்கிய வீடு எனது மகன் தம்பான் மகன்களிடமிருந்து கிரையம் வாங்கிய வீட்டிற்கு கிழக்குபக்கம் தொம்மை பர்ணாந்துக்கு பாத்தியப்பட்ட வீடுகளும், காலிமனையும் உள்ளது என்றால் சரிதான். கந்தசாமி, மாரியப்பனிடம் நான் கிரையம் வாங்கிய வீட்டின் சர்வே எண்.751/31 என்றாலும் எனது மகன் மாரிமுத்து தம்பான் மக்கள் முத்து, சொர்ணம் ஆகியோர்களிடம் கிரையம் வாங்கிய வீட்டின் சர்வே எண்.751/32 என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்.751/32க்கு கிழக்குபக்கம் தான் சர்வே எண்.751/35 உள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது.

சர்வே எண்.751/35 க்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றாலும் நான் கிரையம் வாங்கிய சொத்து கிடையாது என்றாலும் சரியல்ல. நான் தான் சர்வே எண்.751/35 க்கு எந்தவித உரிமை ஆவணமும் காட்டாமல் மோசடியாக பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.751/35, 751/36, 751/37, 751/38 ஆகிய அனைத்து இடங்களும் தொம்மை பர்ணாந்துக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.751/35 க்குரிய நான்குபுற எல்கைமால்கள் தபசில் விபரத்தில் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.751/35 க்குரிய அளவுகள் பிராதில் குறிப்பிட்டு இருப்பதுபோல் கிடையாது என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் முடிதிருத்தும் தொழில் மற்றும் ஈமசடங்குகள் செய்யக்கூடிய குடிமகன்கள் என்றால் சரிதான். எங்கள் சமுதாயத்தை சார்ந்தவர்கள் எங்கள் கிராமத்தில் 1500 க்கும் கூடுதலாக இருப்பார்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகளின் சமுதாயத்தில் மூன்று குடும்பங்கள் தான் உள்ளது என்றால் சரிதான். நான் தான் ஆள்பலம், பணபலம் மிக்கவர்கள் என்றாலும், 1,2 பிரதிவாதிகள் ஆள்பலம், பணபலம் மிக்கவர்கள் அல்ல என்றாலும் அவர்கள் எங்கள் சமுதாயத்திற்கு தொழில் செய்யக்கூடியவர்கள் என்றாலும் சரிதான். தொம்மை பர்ணாந்து வாரிசுகள் பாக்கியத்தாய், மரியம்மாள், அந்தோணியம்மாள், ஜேசுராஜா, சவரிபிச்சை, ஆரோக்கியஅம்மாள் ஆகியோர்களின் பவர் ஏஜெண்டான 5 ம்பிரதிவாதியிடமிருந்து சர்வே எண்.751/35, 751/36, 751/37, 751/39 ஆகிய சொத்துக்களில் தென்வடல் 120 அடி கிழமேல் 13.75 அடி அதில் உள்ள கதவு எண்கள் 5/13, 5/11 ஆகிய வீடுகளை 3,4 பிரதிவாதிகள் 04.02.2009 ல் சட்டப்படி கிரையம் வாங்கி பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. 04.02.2009 கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளிடமிருந்து மேற்படி சொத்துக்களை உரிமையின் அடிப்படையிலும் , அனுபவத்தின் அடிப்படையிலும் 1,2 பிரதிவாதிகளின் தகப்பனார் முருகனுக்கு வா.சா.ஆ.3 சட்டப்படி கிரையம் செய்து அனுபவத்தையும் ஒப்படைத்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் வா.சா.ஆ.3 சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தான் மோசடியாக சர்வே

எண்.751/35 க்கு பட்டா வாங்கி கொண்டு இந்த 1,2 பிரதிவாதிகளுக்கு வீண் இடையூறு செய்து உண்மைகளை மறைத்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.751/35 எனக்கோ, என் முன்னோர்களுக்கோ எந்த காலத்திலும் அனுபவமும் உரிமையும் இருந்தது கிடையாது என்றால் சரியல்ல. சர்வே எண்.751/35 ல் 1,2 பிரதிவாதிகள் வீடுகள் கட்டியும் பாதாள கரண்டி அம்மன் பீடம் அமைத்தும் வழிபட்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தவறனாது என்றாலும் நான் கேட்டுள்ள பரிகாம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் சரியல்ல. என் கணவர் தங்கராஜ் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆகிய சொத்துக்களை பொறுத்து 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது திருவைகுண்டம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.137/2023 தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. அதேபோல் சின்னமுத்து என்ற கோபால், இசக்கி ஆகியோர்கள் மீதும் அசல் வழக்கு எண்.136/2023 தாக்கல் செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் தெரியாது. நானும் எனது கணவரும் சேர்ந்து 1,2 பிரதிவாதிகளை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம்/–
சா. முத்துலெட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவைகுண்டம்.